O.S. No: 173/2020
பெயர்: வெங்கட்ராகவன்
**வா.சா.1**
04-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.23**

**குறுக்கு விசாரணை**

ரெங்கநாயகியம்மாளுக்கு தாவா சொத்து அவருக்கு அவருடைய கணவருக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படி கிடைக்கப் பெற்றது என்றால் தவறு . அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் சி-செட்டியூல் சொத்தாக தாவா புல எண் கொண்ட சொத்து ரெங்கநாயகிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்து சி - செட்டியூலில் இல்லை. தாவா சொத்தின் புல எண் 1538 ஆகும். இந்த புல எண்ணின் பழைய புல எண் தெரியாது. புல எண் 1538 இன் பழைய புல எண் 1358 என்று சொன்னால் தெரியாது. 1358 என்ற புல எண் தான் தற்போது 1538 ஆக உள்ளது என்றால் சரியல்ல . ரெங்கநாயகிக்கும் ராகவாச்சாரிக்கும் மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் சீனிவாசன் , சுந்தரராஜன், சம்பத், அனந்தநாராயணன் மற்றும் சரோஜா . 1938 பத்திரத்தில் ரெங்கநாயகிக்கும் அவருடைய கணவர் ராகவாச்சாரிக்கும் உள்ள வாரிசுகள் பற்றிய விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ரெங்கநாயகிக்கும் ராகவாச்சாரிக்கும் பிறந்த முதல் குழந்தையின் பெயர் சாரங்கராஜன் என்றாலும் அப்போது அவருடைய வயது 12 என்றால் தெரியாது. அப்போது என் அப்பா சீனிவாசன் மைனர் வயது 4 என்றால் தெரியாது. அதே பத்திரத்திலேயே 6 வயதுடைய பத்மாசினி, 1 வயதுடைய விஜயலட்சமி என்ற பெண் குழந்தைகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது . ரெங்கநாயகிக்கும் ராகவாச்சாரிக்கம் சாரங்கராஜன் , பத்மாசினி, விஜயலெட்சுமி ஆகியோர் வாரிசுகளா என்றால் எனக்கு தெரியாது . 26/10/1928 பாகப்பத்திரத்தில்

ரெங்கநாயகிக்கும் சி–செட்டியூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு அவருடைய ஆயுலுக்கு பிறகு ஆயுட் காலத்தில் 1928 க்கு பிறகு பிறக்கபோகும் ஆண் வாரிசுகள் அடையவேண்டியது என்று கண்டுள்ளது என்றால் தெரியாது . அவ்வாறு தான் அந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நான் அந்த விவரங்கள் தெரிந்தே அவற்றை தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல . ரெங்கநாயகிக்கும் ராகவாச்சாரிக்கும் பிரித்த சொத்துக்களில் சி –செட்டியூல் சொத்தில் ஒரு கோவில் கண்டுள்ளது என்றால் ஆமாம். அந்த கோவில் இருக்கும் சர்வே நம்பர் தெரியாது. அந்த கோவில் இருப்பது பரம்பரை சொத்து . என்னிடம் காட்டப்படும் கணினி பதிவிறக்க டவுன் சர்வே லேண்ட் ரிஜிஸ்டர் நகலில் புல எண் 1539 ஸ்ரீகூத்தாழ்வார் கோவில் சொத்து என்று கண்டுள்ளது . டவுன் சர்வே நம்பர் 1537 ம் ஸ்ரீகூத்தாழ்வார் கோவில் சொத்து என்று தான் உள்ளது என்றால் ஆமாம். அந்த சொத்தும் பரம்பரை சொத்தாக இருந்தாலும் 1928 பாகப்பிரிவினை பத்திரத்தின் படி 1928 ற்கு பிறகு பிறந்த ஆண் வாரிசுகள் தான் அடையவேண்டியது என்று சொன்னால் தவறு . எனக்கு 1928 பத்திரங்கள் உள்ள விவரங்கள் நன்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக 1928 க்கு பிறகு பிறந்த ஆண்கள் தான் அடையவேண்டும் என்பதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல . நான் வழக்குரையில் சொல்லியுள்ள சொத்து விவரமே தவறு என்றால் சரியல்ல. புல எண் 1538 இல் எவ்வளவு விஸ்தீர்ணம் எங்கள் குடும்பத்திற்கு சொத்தம் என்று எனக்கு தெரியாது . அதை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் தவறு . நான் வழக்குரையில் வாடகைதாரருடன் செய்துக்கொண்ட வாடகை பத்திரத்தில் கண்டுள்ள சொத்து விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம் . கும்பகோணம் நகர புல எண் 1538 ற்கு யார் யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று தெரியாது .

அந்த சொத்தின் முழு விஸ்தீர்ணம் எனக்கு தெரியாது . புல எண் 1538 இல் என் அப்பாவிற்கு சேரவேண்டிய 1/3 பாகம் கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். 1928 பாகப்பத்திரத்தின் படி என் தந்தைக்கு இந்த சொத்தில் பாகமே கிடையாது என்றால் சரியல்ல . வழக்குரையுடன் வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்திருக்கிறேன் அது சரியானது அல்ல என்றால் சரியல்ல . 2 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வம்சாவழி பட்டியல் தான் சரியானவை என்றால் சரியல்ல . உண்மையான வாரிசுகளான பத்மாசினி மகள்கள் மற்றும் மகன்களை வாரிசுகளாக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு நேரடியாக வாரிசு உரிமை கிடையாது என்றாலும் 2004 இல் இறந்து போன சுந்தர்ராஜனின் இரண்டாம் நிலை வாரிசு என்ற முறையில் 1/3 பாகம் சுந்தர்ராஜன் அடையவேண்டியதில் என் தந்தைக்கு பாகம் உண்டு என்றால் சரியல்ல . அதை மறைத்து என் தந்தைக்கு நேரடியாக 1/3 பாகம் உள்து போல் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . அனைத்து பாகஸ்தர்களையும் சேர்க்காததாலும் சரியான சொத்து விவரம் சொல்லாததாலும் அனைத்து சொத்துக்களையும் சேர்க்காததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி சம்பத் 2021 இல் இறந்தார். சம்பத்திற்கு நேரடி வாரிசு இல்லை. வாரிசு சம்பந்தமாக வழக்கு நடந்து வருகிறது . இந்த வழக்கில் 2, 4 பிரதிவாதிகள் தான் சம்பத்தின் வாரிசுகள் என்றால் சரியல்ல. நான் சம்பத்தின் வாரிசு என்று தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடியாகி மேல் முறையீட்டில் உள்ளது என்றால் சரி . அதே வழக்கில் 2, 4 பிரதிவாதிகள் தாங்கள் தான் சம்பத்தின் வாரிசுகள் என்று கோரிய கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . சம்பத்தும், அனந்தநாராயணனும்(2 ஆம் பிரதிவாதியும்) சேர்ந்து 3 ஆம் பிரதிவாதியை

வழக்கு சொத்தில் இருந்து வெளியேற்ற கோரி ஆர் .சி.ஓ.பி. 21/2013 தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் ஆமாம் . அந்த வழக்கில் என்னையும் எதிர்மனுதாரராக சேர்க்க வேண்டும் என்று நான் மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் ஆமாம். என் மனு அனுமதிக்கப்பட்டு என்னை தரப்பினராக சேர்த்திருந்தாலும் எனக்கு உரிமையில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த உத்தரவு **பி.சா.ஆ.1 ஆகும்.** இந்த ஆர்சிஓபி உத்தரவின் பேரில் நான் மேல் முறையீடு செய்தேன் . அது தள்ளுபடியாகிவிட்டது. அதன் மீது நான் சி .ஆர்.பி போனேன் அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் Disposed of with direction. எந்த தேதியில் அவ்வாறு ஆனது என்றால் செப்டம்பர் 2025 இல் அவ்வாறு ஆனது . அந்த உத்தரவின் பேரில் 2 ஆம் பிரதிவாதி நிறைவேற்று மனு வாடகைதாரரை வெளியேற்ற தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. நான் உரிமைகோரியுள்ள ரெங்கநாயகியின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . சுந்தர்ராஜனின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை. சம்பத், விஜயலட்சுமி, பத்மாசினி ஆகியோரது இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை . இவ்வாறு வரிசையாக யாருக்கு யார் வாரிசு என்ற விவரமும் அதில் யார் இறந்துள்ளார்கள் அவர்களது வாரிசு யார் யார் என்று ஆவணங்களுடன் முன் வைக்காமல் நான் வாடகை பத்திரத்தின் அடிப்படையில் பாகம் கோரியிருப்பது சட்டப்படி ஏற்கதகுந்ததல்ல என்றால் சரியல்ல. 1928 இல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி இரண்டாம் பிரதிவாதிக்கு நேரடி வாரிசு என்று முறையில் , சுந்தர்ராஜன் மற்றும் சம்பத்தின் இரண்டாம் நிலை வாரிசு என்ற முறையிலும், மொத்தமாக அவருக்கு தாவா சொத்து உட்பட அனைத்து சொத்துக்களிலும் 1928 சி–செட்டியூல்

சொத்துக்களில் 87/144 பாகம் கிடைக்கக்கூடியது என்றால் தெரியாது . அதேபோல் 4 ஆம் பிரதிவாதிக்கு சுந்தர்ராஜன் மற்றும் சம்பத்தின் இரண்டாம் நிலை வாரிசு என்ற முறையிலும் , மொத்தமாக அவருக்கு தாவா சொத்து உட்பட அனைத்து சொத்துக்களிலும் 1928 சி–செட்டியூல் சொத்துக்களில் 37/144 பாகம் கிடைக்கக்கூடியது என்றால் தெரியாது . அதேபோல் காலம் சென்ற பத்மாசினி வாரிசுகளான ரவிசந்திரன் , ரமேஷ், லட்சுமி பிரபா , கோமலவள்ளி, ஜெயந்தி ஆகியோருக்கு அவருடைய தாயாரான பத்மாசினிக்கு சுந்தர்ராஜனின் இரண்டாம் நிலை வாரிசு என்ற முறையில் மொத்தமாக அவருக்கு தாவா சொத்து உட்பட அனைத்து சொத்துக்களிலும் 1928 சி–செட்டியூல் சொத்துக்களில் 10/144 பாகம் கிடைக்கக்கூடியது என்றால் தெரியாது . எனவே அனைத்து வாரிசுதாரர்களையும் சேர்க்காததாலும் சரியான சொத்து விவரம் சொல்லாததாலும் என்னடைய தந்தையே சுந்தர்ராஜனின் இரண்டாம் நிலை வாரிசுதாரர் என்ற நிலையில் சொத்து உரிமை படைத்தவர் என்ற நிலையில் நான் கோரும் 1/3 பாகம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு 2, 4 பிரதிவாதிகளின் முழு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல . இந்த வழக்கு 2, 4 பிரதிவாதிகள் வயோதிகர் என்பதை பயன்படுத்தி அவர்களடைய சொத்தை அடைந்துவிடலாம் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . இதேபோல் தான் ஆர் .சி.ஓ.பி வழக்குகள் எல்லாத்திலும் எனக்கு எந்த உரிமையும் இல்லாமல் 2, 4 பிரதிவாதிகள் வாடகை கூட வாங்க முடியாமல் செய்கிறேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.00**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and

interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.